# முசிறி நகராட்சி

**2022-ஆம் ஆண்டு மே மாதம் (24.05.2022) 24-ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் | தீர்மானம் |
|---|---|---|
| 11.04.2022 | **<u>பொருள் - 1</u>**<br>சொத்துவரி, காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி–4), நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில் சொத்துவரி, காலிமனைவரி, சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட நகர்மன்ற 11.04.2022 தேதிய 27–ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபணைகள் / ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரடியாகவோ, | தீர்மானம் எண்.28 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் மாலைமுரசு (13.04.2022) தினகரன் (14.04.2022) ஆகிய தமிழ் தினசரி செய்தித்தாள்களிலும் (Times of India 14.04.2022) ஆங்கில நாளிதழிலும் அலுவலக விளம்பர பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் பொது மக்கள் / சொத்து உரிமையாளர்களிடம் இருந்து ஆட்சேபணைகள் / ஆலோசனைகள் ஏதும் வரப்படவில்லை. எனவே, நகர் மன்றத்தில் 11.04.2022 தேதிய 27 எண் தீர்மானத்தின்படி 2022–2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு முதல் (01.04.2022) சொத்துவரி சீராய்வு செய்திட உறுதி செய்திட மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>அ) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்( ந.க.எண்.579/2022/அ1) | |

ஒப்பம்/– சி. கலைச்செல்வி
நகர்மன்றத் தலைவர்
முசிறி நகர்மன்றம்

// உண்மை நகல் //

**ஆணையர்**
**முசிறி நகராட்சி**